# இனியவை நாற்பது காட்டும் தனிமனித அறம்

பெ. சிவசக்தி,

*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,*

*ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி, சிவகாசி.*

**முன்னுரை:**

தனிமனிதனாயினும் , சமுதாயமாயினும் முழுமையான நிலையில் சிறப்புற வாழ வழிவகுப்பது அறச்சிந்தனையே ஆகும். இதுதான் அறம் என்று முழுமையாகப் பொருள் கூறிவிட முடியாது. தனிமனிதனின் நடைமுறைகள் , அவரவர் அளவில் செய்கின்ற நற்செயல்களின் தொகுதியே அறம் எனக் கருதப்படுகின்றது. அந்த வகையில் இனியவை நாற்பதில் இடம் பெற்றுள்ள தனிமனித அறக்கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் :**

'அறு' என்றும் வினைச்சொல்லடியாகப் பிறந்ததே **'அறம்'** என்னும் சொல்லாகும். அறு என்னும் சொல்லுக்கு அறுத்துச்சொல் , வழியை உண்டாக்கு உருவாக்கு,துண்டி,வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன.

> **'அம்மாண் நகருக்கு அரசன் அரசர்க்கு அரசன்/ செம்மாண் தனிக்கோல் உலகு ஏழினும் செல்ல நின்ற/ இம்மாண் கதைக்கு ஓர் இறை ஆய இராமன் என்னும்/ மொய்ம்மாண் கழலோன் தருநல் அறமூர்த்தி அன்னான்''[1]**

என்ற பாடலால் தருமம் என்பது அறத்தைக் குறிப்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது.

" ஆங்கிலத்தில் **'அறம்'** என்ற பொருளைக் குறிப்பதற்கு **'இயற்கை நீதி'** (National Justice) அல்லது **'இயற்கை விதி'**,இயற்கை நெறி என்ற சொற்கள் பயன்படுகின்றன.'Justice' என்ற சொல் நீதி என்ற பொருளோடு அறம் என்ற சொல்லின் கருத்தையும் உணர்த்துவதாகும். 'நீதி, அறம் என்ற இருவகைக் கருத்துக்களுக்கும் ஆங்கிலத்தில் 'Justice' என்ற ஒரே சொல் தான் உண்டு[2]

உலகத்தில் உள்ள நேர்மை,தூய்மை,உண்மை,வாய்மை,மெய்மை, சான்றாண்மை முதலான அனைத்து நற்பண்புகளும் அறம் எனப்படும். மனித இனத்தின் நன்மைக்காக இன்பத்தின் காப்பகமாக உருவாக்கப்பட்டதே அறம் எனப்படுகின்றது.

அத்தகைய அறக்கருத்துக்களைத் தனிமனித அறம் பொது அறம் என இரண்டாகப் பிரிக்கலாம். இனியவை நாற்பதில் இடம் பெறும் தனிமனித அறத்தைப்பற்றி இங்கு காண்போம்.

**தனிமனித அறம்:**

மனிதர்கள் கூடி வாழும் அமைப்பே சமுதாயம் ஆகும். சமுதாயம் நீண்ட காலமாக வளர்ந்த பண்பாட்டு அமைப்பாகும். பண்டைக்காலம் முதல் பண்பாடு பழக்கவழக்கம் முதலியவற்றால் காலந்தோறும் மனிதமனம் பண்பட்டு வந்துள்ளது. தனிமனிதச் சிந்தனைகள் பல்வேறு நன்மைகள்,தீமைகள் நடைபெறுவதற்குக் காரணமாக அமைகின்றன.தனிமனித நிலையில் ஒருவனது கடமைகள் எண்ணங்கள் சமுதாயத்தில் முதன்மை பெறுகின்றன. மனிதன் சான்றோனாகச் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் வாழ்வது என்பது தனிமனிதப் பண்புகளைப் பொறுத்தே அமையும். எனவேதான் தனிமனித அறம் இலக்கியங்களில் வலியுறுத்தப்படுவது இன்றியமையாததாக அமைகின்றது.

இனியவை நாற்பது நூலில் தனிமனித அறங்களாக கீழ்க்கண்டவைகள் அமைந்துள்ளன.

1. ஒழுக்கம்
2. பெற்றோரை வணங்குதல்
3. தீயவை செய்யாமை
4. புறங்கூறாமை
5. அடைக்கலப்பொருளைக் காத்தல்
6. வாழ்க்கைத் துணைநலம்
7. புலால் மறுத்தல்
8. செய்ந்நன்றியறிதல்

**ஒழுக்கம்:**

தனிமனித அறத்தில் முதன்மையானது ஒமுக்கம் ஆகும். ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் மேலானதாகக் கருதப்படுகின்றது.ஒருவனுடைய வாழ்வு அவனது ஒழுக்கத்தையே பொறுத்து நிற்கின்றது. ஒழுக்கமில்லாதவன் உயிரில்லாதவன் ஒழுக்கமில்லாத மாந்தர் நடைபிணங்களாவான் மனிதப்பிறவி தாங்கியவனாகான்”[3] என்று திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார். பூதஞ்சேந்தனாரும் “பங்கம் இல் செங்கையர் ஆகிப்பிரிந்து யார்க்கும் அன்புடையார் ஆதல் இனிது” (இனி. நா:9) என்று குறிப்பிட்டுள்ளார்.

**பெற்றோரை வணங்குதல்:**

பெற்றோராகிய தாய் தந்தையை வணங்குதல் அறங்களில் தலைசிறந்த அறமாகும். ஆசாரக்கோவை முன்னோர் அமைத்து வைத்துள்ள முறைகளுள் ஒன்றாக பெற்றோரை வணங்குவதைக் கூறுவதை

**“தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே**

**முந்தையோர் கண்ட முறை”**[4] என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**“எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்**

**கண்டு எழுதல் காலை இனிது”** (இனி.நா.18)

என்னும் பாடலடியில் குறைவில்லாத சிறப்பினை உடைய தாய் தந்தையரின் பாதத்தில் காலை வேளையில் சென்று பார்த்து வணங்கி எழுதல் இனிமையாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**தீயவை செய்யாமை:**

தீய வழிகளில் சென்று தீய செயல்களைச் செய்து வாழாமல் இருப்பதே அறமாகும். இனியவை நாற்பதில் இதைப்பற்றிக் கூறுகையில்,

**“தந்தையே ஆயினும் தான் அடங்கான் ஆகுமேல் கொண்டு**

**அடையான் ஆதல் இனிது”** (இனி.நா.7)

என்கிறது. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றாலும் தன்னைப் பெற்ற தந்தையே ஆனாலும் தீநெறியினால் அடங்காதவனாய் இருப்பானேல் அவன் சொல் கேட்டு நடக்காமல் இருத்தல் சிறந்த அறமாகும்.

**புறங்கூறாமை:**

ஒருவர் மற்றவரைப் பற்றி அவர்கள் இல்லாத இடத்தில் இழிவாகப் பேசுதல் ‘ புறங்கூறுதல்’ எனப்படும். வள்ளுவர் புறங்கூறாமை என்ற கருத்தினை ஒரு அதிகாரம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

**"அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது"**[5]

என்னும் குறட்பா ஒருவன் அறமெனக் கருதப்படும் செயல்களைச் செய்யாவிடினும் புறங்கூறாதவன் என்றாவது உலகத்தாரால் போற்றப்படல் வேண்டும் என்கிறது.

"போகவிட்டுப் புறஞ்சொல்லித்திரிய வேண்டாம்"[6] என்னும் உலகநீதியும் தன்முன் நின்று பேசியவர் சென்ற பின் அவரைப்பற்றி இல்லாவற்றைப் பேசவேண்டாம் என்கிறது.

"நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே" (இனி.நா.19) என்று தன்னிடம் நட்புக் கொண்டவரைப்பற்றி புறங்கூறாதவனாய் வாழ்வது மிக இனிது என்று இனியவை நாற்பது குறிப்பிடுகிறது.

**அடைக்கலப்பொருளைக் காத்தல்:**

ஒருவர் நம்பிக்கையோடு தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்த பொருளைத் தானும் அபகரிக்காது பிறரையும் திருடவிடாது காத்து மீண்டும் அவரிடம் கொடுத்தல் சிறந்த அறம் ஆகும்.

**"உள்ளது ஒருவர் ஒருவர்கை வைத்தக்கால்**
**கொள்ளும்பொழுதே கொடுக்கதாம் - கொள்ளார்**
**நிலைப்பொருள் என்றதனை நீட்டித்தல் வேண்டா**
**புதைப்பொருள் தங்கா வெளி"**[7.]

என்கிறது பழமொழி நானூறு.

**"அன்று அறிவார் யாரென்று அடைக்கலம் வெளிவராத**
**நன்றியின் நன்கு இனியது இல்"** (இனி.நா.30)

என்கிறது. அதாவது தன்னிடம் பொருள் கொடுத்த போது அதை அறிந்தவர் ஒருவரும் இல்லை என்று அடைக்கலமாகக் கொடுத்த பொருளைக் கவரக்கூடாது. அவ்வாறு இருத்தல் மிக இனிது என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**வாழ்க்கைத் துணைநலம்:**

மனைவி என்பவள் நற்பண்பு உடையவளாக இருக்க வேண்டும். கணவனின் வருவாயறிந்து செயல்படுபவளாக இருக்க வேண்டும். என்பதனை வள்ளுவர்,

**"மனைத்தக்க மாண்பு உடையாள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"**[8]

என்று குறிப்பிட்டுள்ளார்.

"நிறைமாண்பு இல் பெண்டிரை நீக்கல் இனிதே" (இனி.நா.10) மேற்காணும் வரி கற்பாகிய மாட்சிமை இல்லாத மனைவியை நீங்கி வாழ்தல் இனிது என்று குறிப்பிடுகிறது.

**புலால் மறுத்தல்:**

பிற உயிர்களையும் தம் உயிர்போல மதித்தல் வேண்டும். பிறர் உயிர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும்.அதை விடுத்துப் பிற உயிர்களைக் கொலை செய்து அதன் ஊனை உணவாக உண்ணக்கூடாது என்பதை இலக்கியங்களில் வலியுறுத்துகின்றனர்.

**"கொலைபுரியான் கொல்லான் புலான் மயங்கான் கவர்த்த"**[9] என்று ஏலாதியும்

**"புலையுங் கொலையுங் களவுந்தவிர்"**[10]

என்று கொன்றை வேந்தனும் குறிப்பிடுகிறது.

**“ஊனைத்தின்று ஊனைப்பெருக்காமை முன்னினிதே”** (இனி.நா.4)

என்பதன் மூலம் புலால் உண்ணுதலைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

**செய்ந்நன்றியறிதல்:**

நாம் துன்புற்ற காலத்தில் சமயமறிந்து நமக்கு ஒருவர் உதவி செய்தால் அதை என்றும் மறக்கக்கூடாது. அவ்வாறு மறக்காமல் இருத்தலே ‘செய்ந்நன்றி அறிதல்’ஆகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த வள்ளுவர் ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார்.

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு”**[11]

எனும் குறள்வழி ஒருவன் எத்தகைய அறத்தை அழித்தவனாக இருந்தாலும் பஞ்சமாபாதகத்தைச் செய்து இருந்தாலும் அதிலிருந்து தப்பிக்க வழியுண்டாம். ஆனால் ஒருவன் செய்த நன்றியை(உதவி) மறந்தவனுக்கு அவற்றிலிருந்து விடுபட வழியேயில்லை என்கிறார்.

“நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிதே” (இனி.நா.30) என்று செய்ந்நன்றி அறிதல் பற்றி இனியவை நாற்பதும் குறிப்பிடுகிறது.

**முடிவுரை:**

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறம் எனப்படுகிறது.அறத்தைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவியபோதும் இதுதான் அறம் என்று கூற இயலாது.

தனிமனித ஆற்றலும் ,சிந்தனைத் திறமும் அவனுக்கும் அவன் சார்ந்துள்ள சமுதாய முன்னேற்றத்திற்கும் என்றும் துணை புரியும் தன்மை உடையவை.

இனியவை நாற்பதில் இடம் பெற்றுள்ள தனிமனித அறங்களான ஒழுக்கம் , பெற்றோரை வணங்குதல் ,தீயவை செய்யாமை, புறங்கூறாமை, அடைக்கலப் பொருளைக் காத்தல், வாழ்க்கைத்துணை நலம் , புலால் மறுத்தல் , செய்ந்நன்றியறிதல் போன்றவற்றை இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

[1] வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்(உ.ஆ) கம்பராமாயணம். பா.கா. மூலமும் உரையும் அரசியற்படலம் பா.1
[2] மா.சண்முகசுப்பிரமணியன் குறள் கூறும் சட்டநெறி ப.2.
[3] கு.ப.மகாலிங்கம் திரு.வி.க.வின் சமுதாய நோக்கு ப.45
[4] துரை இராசாராம்(உ.ஆ) பதினெண்கீழ்க்கணக்கு தொகுதி - 3, பா.எ.4
[5] மு.வரதராசனார் (உ.ஆ) திருக்குறள் கு.எ.181
[6] டாக்டர் கதிர்முருகு (உ.ஆ) நீதிக்களஞ்சியம் (உலக நீதி) பா.எ.1
[7] எஸ். கௌமாரீஸ்வரி (ப.ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (பழ.நா) பா.எ.341
[8] மு.வரதராசனார் (உ.ஆ) திருக்குறள் கு.எ.51
[9] எஸ். கௌமாரீஸ்வரி (ப.ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (ஏலாதி) பா.எ.2.
[10] டாக்டர் கதிர்முருகு (உ.ஆ) நீதிக்களஞ்சியம் (கொன்றைவேந்தன்) பா.எ.63
[11] மு.வரதராசனார் (உ.ஆ) திருக்குறள் கு.எ.110